# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 09 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி

*(2020.01.14 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


# இலங்கை இயன்மருத்துவச் சங்கம் (கூட்டிணைத்தல்)

*(தனியார் உறுப்பினர் சட்டமூலம்)*

**இலங்கை இயன்மருத்துவச் சங்கத்தை கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

*கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ எஸ்.எம். மரிக்கார் அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 28.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## இலங்கை இயன்மருத்துவச் சங்கம்
## (கூட்டிணைத்தல்)

## இலங்கை இயன்மருத்துவச் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கான தொரு சட்டம்

*முன்னுரை.*

"இலங்கை இயன்மருத்துவச் சங்கம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமானதொரு சங்கமானது, அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட சங்கத்துடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுறுதிமிக்க முறையில் கொண்டுநடாத்தி அவற்றை நிறைவேற்றும் நோக்கத்துக்கென இலங்கையில் இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும்:

அத்துடன், மேற்படி சங்கமானது, எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அத்தகைய பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரையில் வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டு நடாத்தியும் வந்துள்ளதாதலாலும், மேலும் அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும் மற்றும் சொல்லப்பட்ட விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாக விருக்குமாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2020 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, இலங்கை இயன்மருத்துவச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*இலங்கை இயன்மருத்துவச் சங்கத்தைக் கூட்டிணைத்தல்.*

**2.** (1) இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் இலங்கை இயன்மருத்துவச் சங்கத்தின் (இதனகத்துப்பின்னர் "சங்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தற்போதைய உறுப்பினர் களாகவுள்ள அல்லது இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத் தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக் கொள்ளப் படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும் "இலங்கை இயன்மருத்துவச் சங்கம்" (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) என்னும் பெயர் மகுடத்தின்கீழ்

இடையறாவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாதல் வேண்டுமென்பதோடு, அப்பெயர்கொண்டு அனைத்து நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுக்கப்படலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்: அத்துடன் அது பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் , பயன்படுத்தவும், அது விரும்பியவாறு அதனை மாற்றவும் முழுத்தத்துவமும், அதிகாரமும் உடையதாயிருத்தலும் வேண்டும்.

(2) இலங்கையில் செயற்படுகின்ற அனைத்து இயன்மருத்துவர்களுக்கும் ஒரேயொரு தொழில்சார் கல்விசார் மற்றும் ஒழுங்குபடுத்துகை அமைப்பாக கூட்டுத்தாபனம் இருக்கும்.

(3) கூட்டுத்தாபனமானது 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூகசேவைகள் ஒழுங்கமைப்புக்கள் (பதிவுசெய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின் நோக்கத்திற்கான கருத்தெல்லைக்குள் வருகின்ற வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்பாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்வதிலும் மற்றும் அது தொடர்பிலும் ஏற்புடையதாதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** (1) கூட்டுத்தாபனம் அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது:-

(அ) இயன்மருத்துவம் மற்றும் அதனுடன் தொடர்புடைய அறிவியல்களை ஊக்குவித்தல் மற்றும் சங்கத்தின் குறிக்கோள்களை அடைந்துகொள்ளும் நோக்கில் இலங்கை அரசாங்கத்துடன், மிகவும் குறிப்பாக சுகாதாரத்திற்குப் பொறுப்பான அமைச்சருடன் சிறந்த தொடர்புகளைப் பேணுகின்ற அதேவேளை, இயன்மருத்துவத் தொழில்வாண்மை பற்றிய கீர்த்தியையும் அதன் மீதான ஆர்வத்தினையும் பேணுதல்;

(ஆ) இலங்கை குடியரசில் இயன் மருத்துவத் தொழில்வாண்மையினை, அதன் அனைத்து அம்சங்கள் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பில் ஊக்குவித்தல்;

(இ) கலந்துரையாடல்களை மேற்கொண்டு பொதுவான பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளும் நோக்கில் இதன் அங்கத்தவர்கள் மீதானதொரு மைய அவதானத்தினைச் செலுத்துதல்;

(ஈ) காலத்திற்குக் காலம் ஏற்படக்கூடிய அத்தகைய தன்மையின் அடிப்படையில் சங்கத்தினால் தீர்மானிக்கப் படுகின்றவாறான, இயன் மருத்துவம் மற்றும் தொடர்புபட்ட அறிவியல்களின் ஊக்குவிப்புக்காக சங்கத்தின் நிதிகளிலிருந்து பணத்தினை வழங்கல்;

(உ) இயன்மருத்துவத் தொழில்வாண்மையிலுள்ள இழப்புக் குள்ளான மற்றும் வறிய நிலைக்குத் தள்ளப்பட்ட அங்கத்தவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் நோக்கில் இயன்மருத்துவ மனிதநேய நிதியமொன்றைத் தாபித்தல்;

(ஊ) சங்கத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதில், சங்கத்தின் அடிப்படையினை ஊக்குவிப்பதற்கான நிபுணர்களின் ஆதரவு அல்லது ஆலோசனையைப் பெறும் நோக்கில், கிடைக்கின்ற அனுகூலங்கள் மற்றும் உதவியைப் பெறுதல் குறித்தான நோக்கத்திற்காக சர்வதேச இயன்மருத்துவ அமைப்புகளுடன் சர்வதேச உறவுகளை இணைத்துக் கொள்ளல் அவற்றை மேலும் தாபித்தல் மற்றும் ஊக்குவித்தல்;

(எ) இயன்மருத்துவத் தொழில்வாண்மையிலுள்ள இதன் அங்கத்தவர்களுக்கு அறிவூட்டுவதோடு, இயன்மருத்துவத்திலான அண்மைக்கால உள்நாட்டு மற்றும் சர்வதேச அபிவிருத்திகள் குறித்தான முன்னேற்றகர விடயங்கள் பற்றிய தகவல்களைத் தொடர்ந்தும் வழங்குதல்;

(ஏ) அங்கத்தவர்களின் இயன்மருத்துவத் துறையிலான அறிவு மற்றும் திறனாற்றல்களைப் பரிமாறுவதற்கு அவர்களை இயலச் செய்யும் வகையிலானதொரு கருத்துமன்றத் தினைத் தாபித்தல்;

(ஐ) இயன்மருத்துவத் தொழில்வாண்மையினை வினைத் திறன்மிக்க முறையிலும் பயனுறுதிமிக்க முறையிலும் ஊக்குவிக்கும் நோக்கில் அங்கத்தவர்களின் தொழில்வாண்மை நடத்தை பற்றிய அம்சங்களை ஊக்குவித்தல்:

மேலும் அத்துடன்

(ஒ) சங்கத்தில் பதிவுசெய்துள்ள நபர்களின் தொழில்வாண்மை நடத்தைக் கோவை ஒன்றைத் தாபித்தல்;

(ஓ) பருவகால சஞ்சிகை ஒன்றைப் பிரசுரித்தல், இதுவே சங்கத்தின் செய்திப்பத்திரிகையாக விளங்கும்;

(ஔ) சங்கத்தின் அங்கத்தவர்களின் கூட்டங்களை கிரம அடிப் படையில் நடாத்துதல்;

(க) மண்டபங்களாக, நூலகங்களாக, விரிவுரை அறைகளாக அல்லது சங்கத்தின் ஏதேனும் ஏனைய நோக்கத்திற்காக உபயோகிப்பதற்காக எந்தவொரு காணியையோ அல்லது வளவினையோ கொள்வனவு செய்தல், குத்தகைக்குப் பெறுதல், வாடகைக்குப் பெறுதல் மற்றும் கையுதிர்த்தல்;

(ங) சங்க அங்கத்தவர்களுக்கு அறிவுறுத்தல்களையும் பயிற்சியையும் வழங்குதல்;

(ச) இயன்மருத்துவத் துறைகளிலுள்ள சிக்கல்கள் பற்றி ஆராய்ச்சி மேற்கொள்ளல்;

(ஞ) இயன்மருத்துவம் தொடர்பான பாடங்களைக் கற்பதனை ஊக்குவிக்கும் நோக்கில் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் தொழில்வாண்மை நியமதரத்தினைக் கொண்ட தனியார் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு மானியங்களை வழங்குதல்;

(ட) பயிற்சி நிலையங்களை மற்றும் உள்ளகப் பயிற்சி நிலையங்களை மற்றும் /அல்லது நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தி, செயற்படுத்தி, பொறுப்பேற்று மற்றும் அதனை பராமரிக்கின்ற அதேவேளை, சங்கத்தின் குறிக்கோள்களை முன்னேற்றகரமாக அடைந்து கொள்ளும் நோக்கில் திறனாற்றல் மிக்க நபர்களை தொழிலுக்கு அமர்த்துதல்;

(ண) சங்கத்தின் பணித்துறையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆலோசகர்கள், நிபுணர்கள், தொண்டர்கள் ஆகியோரின் சேவைகளை ஊதியத்துடனோ அல்லது ஊதியமின்றியோ பெற்றுக்கொள்ளல்;

(த) சங்கத்தின் குறிக்கோள்களை முன்னேற்றகரமாக அடைந்துகொள்ளும் நோக்கில் சங்கத்தின் கட்டணம் மற்றும் செலவில், சங்கத்தினால் அங்கீகரிக்கப்படுகின்ற யாரேனும் நபருக்கு இலங்கையில் அல்லது வெளிநாட்டில் பயிற்சியளித்தல் அல்லது பயிற்சி வழங்கப்படுவதற்கு ஏதுவாக விளங்குதல்;

(ந) சங்கத்தின் எந்தவொரு குறிக்கோளையும் முன்னேற்றகரமாக அடைந்துகொள்வதற்கு ஏதுவான ஏதேனும் விசேட நம்பிக்கை அல்லது நிபந்தனைகளுக்கு உட்பட்டு அல்லது அவற்றுக்கு உட்படாது, பணமாக அல்லது பண்டமாக அல்லது அசையும் சொத்தாக அல்லது அசையாச் சொத்தாகக் கிடைக்கக்கூடிய சங்கத்தின் நோக்கத்திற்குத் தேவையான சந்தாக்கள், பரிசுகள், நன்கொடைகள், அறக் கட்டளைகள், உபகாரங்கள் ஆகியவற்றை ஏற்றெடுத்து அவற்றை சேகரித்தல்;

(ப) வாகனங்கள், பொறித்தொகுதிகள், இயந்திரங்கள் அல்லது காலத்திற்குக் காலம் சங்கத்தினால் வேண்டப் படக்கூடிய ஏதேனும் ஏனைய விடயங்கள் அல்லது பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக வங்கி களுடன் மற்றும் ஏனைய கடன் வழங்கும் நிறுவனங்க ளுடன் வாடகைக் கொள்வனவு உடன்படிக்கைகளைச் செய்தல்;

(ம) சங்கத்தின் எந்தவொரு ஆதனத்தையும் சொத்துக்களை யும் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ கொள்வனவு செய்தல், விற்றல், ஈடுவைத்தல், குத்தகைக்கு விடுதல், அப்புறப்படுத்தல் அல்லது ஏனைய வகையில் கையாளுதல்;

(ய) சங்கத்தின் ஆர்வம் மிக்க விடயங்கள் மேம்பட்டு அடையப் பெறும் நோக்கில் ஒரு நபர் ஊடாக அல்லது கூட்டுறவு அமைப்பினூடாக அல்லது வேறு வழிமுறையூடாக வெளிநாட்டு அமைப்புகளுடன் ஒத்துழைத்துச் செயற்படல் அத்துடன் சங்கத்தின் ஏதேனும் அல்லது அனைத்து குறிக்கோள்களையும் நிறைவேற்றுதல்; அத்துடன்

(ர) காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்றவாறான குறித்த தன்மையில் குறித்த முதலீடுகள் அல்லது பிணைகளிலான அல்லது அவற்றின் மீதான சங்கத்தின் குறிக்கோள்களின் செயற்பாட்டுக்காக சங்கத்தினால் அவசரமாக வேண்டப்படாத சங்கத்தின் பணங்களை முதலீடு செய்து அவை தொடர்பில் ஈடுபடல்.

(2) மேலே உட்பிரிவு (1) இல் குறித்துரைக்கப்படும் குறிக் கோள்களை அமுலாக்கம் செய்கையில், கூட்டுத்தாபனமானது, அத்தகைய அமுலாக்கம் இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியற்கொள்கை, பிறப்பிடம் அல்லது ஏதேனும் ஏதுக்கள் அடிப்படையிலான ஏதேனும் வேறுபாடின்றி நிறைவேற்றப்படுதல் வேண்டுமென உறுதிப்படுத்தல் வேண்டும்.

மத்திய அரசாங்கத்தின் அல்லது மாகாணத்தின் அமைச்சினது அல்லது திணைக் களத்தினது பணியுடன் முரண்பாடில்லா திருப்பதனைக் கூட்டுத்தாபனம் உறுதிப்படுத்தல்.

**4**. கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்கள், கூட்டுத்தாபனத்தின் பணிக்கும் அரசாங்கத்தின் அல்லது ஏதேனும் மாகாண சபையின் ஏதேனும் அமைச்சினால் அல்லது திணைக்களத்தினால் ஒரே நேரத்தில் நிறைவேற்றப்படும் ஏதேனும் பணிக்கும் இடையே முரண்பாடெதனையும் உருவாக்காத வகையிலான அத்தகைய முறையில் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**5**. *(1)* இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமைசெய்தலும் நிருவகித்தலும் 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளின்மூலம் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையுடைய பதவிதாங்குநர்களைக் கொண்டதொரு முகாமைத்துவச் சபையினால் (இதனகத்துப்பின்னர் “சபை” எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

*(2)* *(அ)* இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று பதவிவகிக்கின்ற சங்கத்தின் முகாமைத்துவச் சபையானது, 7 ஆம் பிரிவின்கீழான விதிகளின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் கூட்டுத்தாபனத்தின் முதலாவது சபை நியமிக்கப்படும் வரை அல்லது தேர்ந்தெடுக்கப்படும்வரை கூட்டுத்தாபனத்தின் சபையாகப் பணியாற்றுதல் வேண்டும்.

*(ஆ)* கூட்டுத்தாபனத்தின் முதலாவது சபையானது இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்து ஓராண்டிற்குள் நியமிக்கப்படுதல் அல்லது தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

*(3)* *(அ)* போஷகர்களும் மதியுரைஞர்களும் உள்ளிட்ட சபையின் ஒவ்வொரு பதவிதாங்குநரும் மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக்கு நியமிக்கப்படுதல் அல்லது தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய எவரேனும் பதவிதாங்குநர், போஷகர் அல்லது மதியுரைஞர் சொல்லப்பட்ட மூன்றாண்டு காலப்பகுதி கழிந்ததன் பின்னர் மீள நியமிக்கப்படுவதற்கு அல்லது மீளத்தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகவுடையவராலும் வேண்டும்;

(ஆ) பதவிதாங்குநரொருவரின் இறப்பு, பதவிவிலகல், உடற்றகுதியீனம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் காரணமாக வெற்றிடமொன்று ஏற்படும் பட்சத்தில், சபையானது கூட்டுத்தாபனத்தின் விதிகளைக் கருத்திற்கொண்டு, அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஆளொருவரைத் தேர்ந்தெடுத்தல் அல்லது நியமித்தல் வேண்டும்; மற்றும்

(இ) பந்தி (ஆ) வின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட குறித்த நபரானவர், எந்த உறுப்பினரை அவர் அடுத்துறுகின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்கு மட்டுமே பதவிவகித்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

**6**. இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனமானது பின்வரும் தத்துவங்களுட்பட, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தன்மைத்தானதுமான அத்தகைய எல்லாச் செயல்களையும் கருமங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் தத்துவமுடையதாதல் வேண்டும்:-

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காகத் தேவைப்படக்கூடிய காணிகளை அல்லது கட்டிடங்களைக் கொள்வனவு செய்தல், கொள்ளுதல், வாடகைக்கு எடுத்தல், நிர்மாணித்தல், புனரமைத்தல் மற்றும் வேறுவகையாகப் பெறுதலும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் உசிதமானதெனக் கருதக்கூடியவாறு அவற்றைக் கையாளுதலும் அல்லது கையுதிர்த்தலும்;

(ஆ) பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி நிதிகளைத் திரட்டுதல் மற்றும் காசாக அல்லது பண்டமாக மானியக்கொடைகளையும், கொடைகளையும் அல்லது நன்கொடைகளையும் பெறுதலும்:

ஆயின், சபையானது கூட்டுத்தாபனத்திற்கு அளிக்கப்பட்ட எல்லா வெளிநாட்டு மானியக்கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகள் தொடர்பிலும், நிதி என்னும் விடயம் எவ்வமைச்சருக்குக் குறித்தளிக்கப் பட்டுள்ளதோ அவ்வமைச்சரின் அமைச்சினது வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களத்தின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்;

(இ) மாற்றுண்டியல்கள், காசோலைகள், வாக்குறுதிப் பத்திரங்கள் மற்றும் வேறு கைமாற்றத்தகு சாசனங்கள் என்பவற்றை ஆக்குதலும், வரைதலும், ஏற்றுக் கொள்ளுதலும், கழிப்பனவு செய்தலும், புறக் குறிப்பிடுதலும், கைமாற்றுதலும், வாங்குதலும், விற்றலும், வழங்குதலும் மற்றும் ஏதேனும் வங்கியில் கணக்குகளைத் திறத்தலும், தொழிற்படுத்தலும், பேணுதலும், மூடிவிடுதலும்;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக உடனடியாகத் தேவைப்படாத ஏதேனும் நிதிகளை சபை தீர்மானிக்கக் கூடியதான அத்தகைய முறையில் முதலீடு செய்தலும்;

(உ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் ஏதேனும் சட்டமுறையான நம்பிக்கைப் பொறுப்பை அல்லது ஏதேனும் உண்மையான அல்லது தனிப்பட்ட ஆதனத்தைப் பொறுப்பேற்றலும், ஏற்றுக் கொள்ளுதலும், நிறைவேற்றுதலும், புரிதலும் மற்றும் நிருவகித்தலும்;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களையும், சேவையாளர் களையும் நியமித்தலும், தொழிலுக்கமர்த்துதலும், பதவிநீக்குதலும் அல்லது அவர்களின் சேவைகளை முடிவுறுத்தலும் அத்துடன் அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும் மற்றும் கூட்டுத்தாப

னத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய சம்பளங்களையும், படிகளையும், பணிக்கொடைகளையும் அவர்களுக்குச் செலுத்துதலும்; அத்துடன்

(எ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களைத் தகுந்த முறையிலும் பயனுள்ள வகையிலும் நிறைவேற்றுவதற்கு அவசியமானவாறான அல்லது உசிதமானவாறான வேறெல்லாக் காரியங்களையும் செய்தலும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**7**. (1) கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப்பெரும்பான்மை கொண்டும், பின்வரும் விடயங்களுள் எல்லாவற்றுக்காகவும் அல்லது அவற்றின் ஏதேனும் ஒன்றுக்காக இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளை காலத்துக்குக் காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்:-

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தல், உறுப்பினர்களை சேர்த்தல், அவர்கள் விலகுதல் அல்லது அவர்களை விலக்குதல் அல்லது அவர்களை பதவி நீக்குதலும் மற்றும் உறுப்பினர்களினால் செலுத்தப்படற்பாலனவான கட்டணங்களும்;

(ஆ) சபையின் பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல் அல்லது பதவி தாங்குநர்கள் பதவியை வறிதாக்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் அத்துடன் அவர்களின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள்;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்களின், முகவர்களின் மற்றும் சேவையாளர்கள் என்போரின் நியமனத்திற்கான விதிமுறைகளும் நிபந்தனைகளும் அவர்களின் தத்துவங்களும், பணிகளும் மற்றும் கடமைகளும்;

(ஈ) சபையானது அல்லது அதன் ஏதேனும் உபகுழுவினது கூட்டங்களைக் கூட்டுதலிலும் நடாத்துதலிலும் பின்பற்றப் படவேண்டிய நடவடிக்கை முறைகள், அத்தகைய கூட்டங்கள் பற்றிய அறிவித்தல்கள், நிகழ்ச்சிநிரல், அதன் கூட்ட நடப்பெண் அத்துடன் அதில் அலுவல்களை நடாத்துதல்;

(உ) சபையினதும் கூட்டுத்தாபனத்தினதும் உறுப்பினரொரு வராகவிருப்பதற்கான தகைமைகளும் தகைமை யீனங்களும்;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும், முகாமை செய்தலும் ; அத்து டன்

(எ) கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமைத்துவம் செய்தலும், அதன் குறிக்கோள்களை எய்துதலும், கூட்டுத் தாபனத்தைக் கலைத்தலும்.

(2) கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்பட்ட விதி எதுவும், (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதியொன்றென்றாற்போன்று, அதேபோன்ற கூட்டமொன்றில் அதே முறையில் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம் அல்லது அது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் எல்லா நேரங்களிலும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

(4) இப்பிரிவின்கீழ் ஆக்கப்படும் விதிகள் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

உறுப்பினர்களின் இடாப்பு.

**8**. (1) சபையானது உறுப்பினர்கள் பற்றிய இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும். இதில் உறுப்பினர்களின் பெயர், முகவரி மற்றும் வேறு அத்தியாவசியமான விபரங்கள் என்பன உள்ளடக் கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் பற்றிய இடாப்பானது சபையின் செயலாளரின் பாதுகாப்பில் பேணப்படுதல் வேண்டு மென்பதோடு, சங்கத்தின் எந்தவொரு உறுப்பினரினதும் மேற்பார்வைக்காகவும் வெளிப்படையாகப் பேணப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**9.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்திற்காகவும் அது தொடர்பாகவும் கொடை, இறுதிவிருப்பாவணக் கொடை, நன்கொடை, ஒப்பப்பணம், உதவு தொகை, கட்டணங்கள் அல்லது மானியக்கொடை என்ற வகையாகப் பெறப்பட்ட எல்லாப் பணங்களும் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத் தாபனத்தினது வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(3) சட்டத்தின்கீழ் கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும், பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தினால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படுகின்ற வாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

(4) செயலாளர், பொருளாளர் மற்றும் சபையின் உறுப்பினர்களில் ஒருவர் ஆகியோர் மாற்றுண்டியல்கள், காசோலைகள், வாக்குறுதிப்பத்திரங்கள் மற்றும் வேறு கைமாற்றத்தகு அல்லது பரிமாற்றத்தகு சாசனங்கள் அல்லது பிணைகள் என்பவற்றை ஆக்குதல், வரைதல், ஏற்றுக்கொள்ளுதல், கழிப்பனவு செய்தல், புறக்குறிப்பிடுதல், கைமாற்றுதல், வாங்குதல், விற்றல் மற்றும் வழங்குதல் போன்றவற்றுக்கான தத்துவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதோடு, சங்கத்தின் வங்கிக் கணக்குகளை திறப்பதற்கும் அவற்றைப் பேணுவதற்குமான தத்துவத்தினையும் கொண்டிருத்தல் வேண்டும்.

கணக்குகள் மற்றும் கணக்காய்வு.

**10.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது, அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும், பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் என்பன பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி, கூட்டுத்தாபனத்தின் கணக்குகள், கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் நியமிக்கப்பட்ட தகைமைபெற்றவொரு கணக்காய்வாளரினால் வருடாந்தம் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, ''தகைமைபெற்ற கணக்காய்வாளர்'' என்பது-

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக இருந்து, அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளரொருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ஆ) ஏதேனும் கணக்காளர் குழுமமொன்றின் வதிவுள்ள பங்காளர்களுள் ஒவ்வொருவரும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக இருந்து, அத்தகைய நிறுவகத்தினால் கணக்காளரொருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ளாரோ அக்கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

வருடாந்த அறிக்கை.

**11.** (1) சபையானது ஒவ்வொரு நிதியாண்டுக்குமான கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் பற்றிய அறிக்கையொன்றைத் தயாரித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய அறிக்கையை, கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் பற்றிய கூற்றுடன் சேர்த்து சமூகசேவைகள் என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கும், 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்புக்கள் (பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின்கீழ்

நியமிக்கப்பட்ட வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்புகள் பதிவாளருக்கும், அத்தகைய அறிக்கை எந்த ஆண்டு தொடர்பானதோ அந்த ஆண்டை அடுத்துவரும் ஆண்டின் ஆறு மாதங்கள் முடிவுறுவதற்கு முன்னர் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(2) குறித்த நிதியாண்டின்போது கூட்டுத்தாபனத்தினால் பெறப்பட்ட வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுப் பணங்கள் தொடர்பாக தனிவேறான கணக்கொன்று (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கையுடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

சங்கத்தினால் செலுத்த வேண்டிய வையும் சங்கத்திற்குச் செலுத்தப்படற் பாலனவையு மான தனிசுகள்.

**12.** இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று இருக்கின்றதான சங்கத்தின் எல்லாத் தனிசுகளும் பொறுப்புகளும், இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று சங்கத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் செலுத்தப்படற்பாலன வான ஒப்பப்பணங்களும், உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படலும் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.

**13.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதி விருப்பாவணக் கையளிப்பு என்பவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறு வகையாக அதற்கு உரித்தாக்கப்படக்கூடியதான ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்வதற்கும் வைத்திருப்பதற்கும் சட்டப்படி ஆற்றலுடையதும் இயலுமாதலாகுதலும் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஆதனம் யாவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும் அதனை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறு வகையில் கையுதிர்க்கவுள்ள தத்துவத்துடன் கூட்டுத்தாப னத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

பணங்களையும் ஆதனத்தையும் பயன்படுத்தல்.

**14**. எவ்வாறாயினும் பெறப்பட்ட கூட்டுத்தாபனத்தின் பணங்களும் ஆதனமும் அதன் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்காக மாத்திரம் பயன்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் அதன் பாகம் எதுவும் பங்கிலாபம், மிகையூதியம் அல்லது இலாபம் என்ற வகையில் நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படுதலோ அல்லது கைமாற்றப்படுதலோ ஆகாது.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**15**. (1) கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது சபையின் இரு உறுப்பினர்களது முன்னிலையில் அன்றி எத்தகையதுமான சாசனமெதிலும் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாசனத்தில் தமது பெயர்களை எழுதி கையொப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியொருவராகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் இலச்சினை, சபையினால் முடிபு செய்யப்படக்கூடியவாறான சபையின் அத்தகைய பதவி தாங்குநரொருவரின் கட்டுக்காப்பிலிருத்தல் வேண்டும்.

கலைப்பின் போது எஞ்சியுள்ள ஆதனம்.

**16**. கூட்டுத்தாபனம் கலைக்கப்படுவதன்மீது அதன் எல்லாக் கடன்களும் மற்றும் பொறுப்புக்களும் தீர்க்கப்பட்டதன் பின்னர் எத்தகையதுமான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களைக் கொண்டதும், அதன் விதிகளின்படி அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தை பகிர்ந்தளித்தல் தடைசெய்யப்பட்டுள்ளதுமான வேறு ஏதேனும் நிறுவனத்திற்கு கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1) இன் நோக்கத்திற்காக, பொதுக் கூட்டமொன்றில் சமுகமளித்திருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளின்மூலம் கலைப்புக்கு நேர்முன்னர் தோதான நிறுவனமானது கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

*குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**17.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட ஏதேனும் குழுவினது உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**18.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.